IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 36 /2014
Deposition of witness for DW1

Name : ராஜேந்திரன்

Father Name : சுப்பிரமணி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 8 day of December, 2022.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. என் சுப்பிரமணி என் அம்மா காசியம்மாளை திருமணம் செய்துகொள்வதற்கு முன்பே லட்சுமியம்மாள் என்பவரை திருமணம் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் திருமணம் நடந்துள்ளதை பற்றி தெரியும் அவரின் பெயர் எனக்கு தெரியாது. அத்திருமண பந்தத்தின் வாயிலாக அவர்களுக்கு செல்வம் என்ற மகன் பிறந்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் என் அண்ணன் தான். அவருடன் எனக்கு நல்ல பழக்கம். என் அப்பாவுடன் உடன் பிறந்த சகோதரிகளின் பெயர்கள் பொற்கொடியம்மாள், தனபாக்கியம், கிருஷ்ணவேணி மற்றும் வாதி மல்லிகா.

2. என் அப்பாவின் அப்பா பெயர் கோவிந்தராஜ். என் தந்தையாரின் குடும்பத்தைப்பற்றிய விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். என் தாத்தா கோவிந்தராஜ்க்கும், என் அப்பாவிற்கும் இடையே குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனை தொடர்பான விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் அப்போது சிறு வயது என்பதால் எனக்கு தெரியாது. என் அம்மாவை திருமணம் செய்துகொள்ள என்அப்பா முற்பட்டதால் தான் மேற்படி குடும்ப பிரச்சனை ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், லட்சுமியம்மாள் இறந்த பிறகு தான் என்அம்மாவை என்அப்பா திருமணம் செய்துகொண்டார்.

3. கூட்டுக்குடும்பமாக இருந்துவந்து மேற்படி பிரச்சனை செய்து என் அப்பா வீட்டைவிட்டு வெளியே சென்றுவிட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு வீட்டை விட்டு செல்வதற்கு முன்பு 14.12.1979 தேதியிடட வா.சா.ஆ.16 விடுதலைப்பத்திரம் ஏற்படுத்திக்

கொடுத்து விட்டு சென்றுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வா.சா.ஆ.16-ல் முதல் பக்கத்தில் மேலிருந்து 12 வரியில் ரூ.2000/- ரொக்கமாய் பெற்றுக்கொண்டு எல்லா குடும்ப ஜங்கம சொத்துக்களிலிருந்து, எனக்கு உரிய பாகத்தை அக்குவிடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டேன் என்றும், அதற்கு கீழே மூன்று வரிகளுக்கு கீழே இனிமுதல் எனக்கும் எனது வாரிசு வகையறாக்களுக்கும் எவ்வித பாத்தியமும் கிடையாது என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு படிக்க தெரியாது.

4. வா.சா.ஆ.16 ஏற்படுத்திக்கொடுத்த பின்பு என் அப்பாவிற்கு சொத்தில் எந்த பாகமும் கிடையாது என்றும், அவரால் எந்த உரிமையும் கோரமுடியாது என்றும், கூட்டுக்குடும்பத்தை விட்டு தனியே சென்றுவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பாவின் குடும்பத்தைப்பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்று நான் கூறிவிட்டு தற்பொழுது என்பாட்டி, என்தாத்தவைப்பற்றி எனக்கு தெரியும் என்று முன்னுக்கு பின் முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முழுமையாக தெரியாது என்பது சரி என்றும், என் தாத்தா, பாட்டி பற்றி தெரியும் என்று சாட்சி தாமாக கூறுகிறார்.

5. என் தாத்தாவிற்கும் பாட்டிக்கும் இடையே ஏற்பட்ட சொத்து பரிமாற்றங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தாத்தாவின் அப்பாவைப்பற்றியும் எனக்கு தெரியாது. என் தாத்தாவின் அப்பா பாலமந்திரியின் கூட்டுரிமை சொத்து தான் இந்த வழக்கு சொத்து என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆதலால் இவ்வழக்கின் சொத்துக்கள் குறித்து எதுவுமே தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6. பாலமந்திரியின் சொத்தானது என் தாத்தா கோவிந்தராஜ்க்கு எவ்வாறு வந்தது என்ற விவரம் எனக்கு தெரிய வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். பாலமந்திரியின் கூட்டு உரிமை சொத்தானது கோவிந்தராஜ்க்கு கிடைத்த பிறகு அதில் வாதி மல்லிகா மற்றும் 5ம் பிரதிவாதி பொற்கொடி, 6ம்

பிரதிவாதி கிருஷ்ணவேணி, 7ம் பிரதிவாதி தனபாக்கியம் ஆகியோர்கள் இந்து கூட்டுக்குடும்பமாக இருந்து அதில் கோவிந்தராஜ் மட்டும் வழக்கு சொத்தில் சர்வே எண்.15/3 மற்றும் 16/4 ஆகிய சொத்துக்களை 12.4.1989-ல் கூட்டுக்குடும்ப உறுப்பினர்களின் ஒப்புதலின்றி அவரது மனைவி ஜெயம்மாளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

7. அதன்பின்பு ஜெயம்மாள் அவருக்கு வந்த சொத்தை கடந்த 5.8.1991-ல் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயிலானது கூட்டுரிமை சொத்தாக இருப்பதால் அந்த உயில் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதி பொற்கொடியின் கணவர் பெயர் ரேணு. மேற்சொன்ன ரேணு என்பவருக்கு 30.9.1993 தேதியிட்ட பி.வா.சா.ஆ4 உயிலில் எழுதிக்கொடுக்கப்பட்ட சர்வே எண். 18/1 என்ற சொத்து 29.1.1988ம் ஆண்டு அதிலுள்ள 60 செண்ட்டை என் தாத்தா கோவிந்தராஜ் அடமானம் எழுதி கொடுத்துள்ளபோது பி.வா.சா.ஆ4 எழுதி கொடுத்த உயில் செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

8. என் அப்பா கூட்டுக்குடும்ப உறுப்பினராக இல்லாத பட்சத்தில் கூட்டு உரிமை சொத்தான இவ்வழக்கு சொத்திலிருந்து உரிமை கோர முடியாது என்றும், சொத்தை பொறுத்த மட்டில் அவர் 3ம் தரப்பினர் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து கோவிந்தராஜ் மற்றும் ஜெயம்மாள் ஆகியோர் கண்டிப்பாக பாகப்பிரிவினை செய்த பின்பு தான் தங்களுடைய பாகத்தை மற்றவர்களுக்கு மாற்றம் செய்து தர இயலும் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.